| தவணை | கொடுப்பனவுக்குரிய திகதி (அன்று அல்லது அதற்கு முன்னராக) | கொடுப்பனவு குறியிடு |
|---|---|---|
| 1 | 2021, ஆகஸ்ட் 15 | 21221 |
| 2 | 2021, நவம்பர் 15 | 21222 |
| 3 | 2022, பெப்ரவரி 15 | 21223 |
| 4 | 2022, மே 15 | 21224 |

வரி மதிப்பீட்டுக் கொடுப்பனவானது, பின்வருமாறு செலுத்தப்படுதல் வேண்டும்.

| வரி மதிப்பீடு | கொடுப்பனவு திகதி (அன்று அல்லது அதற்கு முன்னர்) | கொடுப்பனவு குறியீடு |
|---|---|---|
| மூலதன ஈட்டுகைகள் மீது | தேறிப் பெறப்பட்ட திகதியிலின் பின்னர் ஒரு மாதத்தினுள் | 21040 இலிருந்து 22030 வரை (பரிவர்த்தனை மாதத்திற்கு ஏற்ப குறியீடு மாற்றப்படும்) |
| மூலதன ஈட்டுகைகள் தவிர்ந்த வரியிடற்பாலதான வருமானத்தின் மீது | 2022, செப்தம்பர் 30 | 21220 |

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk



உரிய திகதியில் வரியை செலுத்தத் தவறும் வரிசெலுத்துநர், அத்தகைய செலுத்தப்படாத வரியை மீளபெறுவதற்காக ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் நடவடிக்கையில் உறப்பட்ட ஏதேனும் செலவினங்களுக்கு பொறுப்புடையவர் ஆவார்.

## 13. பிந்திய மற்றும் குறைவான கொடுப்பனவு மீதான வட்டியும் தண்டமும்

- கொடுப்பனவு திகதியின் போது வரியின் ஒரு தொகை செலுத்தப்படவில்லை எனில், வரிசெலுத்துநர், கொடுப்பனவு திகதியில் இருந்து வரி செலுத்தப்படும் திகதி வரையிலான காலப்பகுதிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையில் வட்டிக்கு பொறுப்புடையவராதல் வேண்டும். வட்டி வீதமானது மாதமொன்றுக்கு அல்லது அதன் பகுதி ஒன்றுக்கு 1.5% ஆதல் வேண்டும் என்பதுடன் அது மாதாந்தம் கணிக்கப்படும்.
- ஒரு வரி காலப்பகுதிக்கு, செலுத்தப்பட வேண்டிய வரி (ஆனால் உள்நாட்டு இறைவரி சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு செலுத்தப்படாத வரி) முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியையேனும் செலுத்த தவறும் ஆளொருவர் செலுத்தப்பட வேண்டிய வரியில் 20% இற்கு சமமான தண்டத்திற்கு பொறுப்புடையவராவார். மேலும், உள்நாட்டு இறைவரி சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு தவணைக் கொடுப்பனவை செலுத்தத் தவறின், பொறுப்புடைய தண்டமானது கொடுக்கப்பட வேண்டிய வரித் தொகையில் செலுத்தப்படாத தொகையின் மீது 10% இற்கு சமமானதாக காணப்படும்.

## 14. வரி விபரத்திரட்டினை கோப்பிட தவறுவதன் மீதான தண்டம்

2021/2022 ஆம் வரி மதிப்பீட்டாண்டிற்கு வருமான விபரத்திரட்டினை, 2022, நவம்பர் 30 திகதி அன்று அல்லது



www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk



அதற்கு முன்னர் கோப்பிடத் தவறும் ஆளொருவர், பின்வருவனவற்றுள் அதிகமான தொகைக்கு சமமான தொகை தண்டத்திற்கு பொறுப்புடையவராவார். –

(அ) செலுத்தப்பட வேண்டிய வரித் தொகையின் 5% உடன், கோப்பிடுகை தவறும் காலம் வரை ஒவ்வொரு மாதமும் அல்லது மாதத்தின் ஒரு பகுதிக்கு செலுத்தப்பட வேண்டிய வரித் தொகையின் 1% : மற்றும்

(ஆ) ரூபா. 50,000/- உடன் கோப்பிடுகை தவறும் காலம் வரை ஒவ்வொரு மாதமும் அல்லது மாதத்தின் ஒரு பகுதிக்கு ரூபா.10, 000.

## 15. ஏனைய தண்ட ஏற்பாடுகளின் பிரயோகம்

### (அ) தண்டங்கள்

- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 180 ஆம் பிரிவின் பிரகாரம் (அசட்டையாக அல்லது மோசடியாகக் குறைபடச் செலுத்துகை) பிழையான கூற்று அல்லது வரி விபரத்திரட்டில் விட்டுவிடுகை காரணமாக, வேண்டுமென்றோ அல்லது அசட்டையாகவோ வரியினை குறைவாக செலுத்தும் (அல்லது செலுத்தி இருக்ககூடிய) வரிசெலுத்துநர் மீது தண்டம் விதிக்கப்படும். தண்டத்தின் தொகையானது குறைவாக செலுத்தப்பட்ட தொகையை அடிப்படையாக கொண்டது. குறைவாக செலுத்தப்பட்ட தொகை ரூபாய். பத்து மில்லியனை விட அதிகமாயின் அல்லது அந்த ஆளின் வரி காலப்பகுதிக்கு, வரி பொறுப்பின் 25% ஐ விட அதிகமாயின் அது குறைவாக செலுத்தப்பட்ட தொகையின் 75% ஆகும். இல்லை எனில், தண்டமானது, குறைவாக செலுத்தப்பட்ட தொகையின் 25% ஆகும்.



www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk



- உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 181 ஆம் பிரிவு ஆனது (போலியாக அல்லது பிழை வழியுய்க்கும் கூற்றுக்கள்), ஓர் வரி உத்தியோகத்தருக்கு பிழையான அல்லது பிழை வழியுய்க்கும் கூற்றுக்களை அளிப்பதனால் விதிக்கப்படும் தண்டமாகும் (பிரிவு 180 இன் கீழ் தண்டம் விதிக்கப்படவில்லை எனில்). தண்டத் தொகையானது, ரூபா 50,000 க்கு சமமானதாக அல்லது, மேற்பட்டதாக இருப்பின், மதிப்பிடப்பட்டிருக்க கூடிய வரித் தொகையின் (அல்லது, குறைக்கப்பட்ட மீளளிப்பின்) அடிப்படையிலான தொகையொன்றாகும்.
- பிரிவு 182 ஆனது (ஆவணங்களைப் பேணுவதற்கு தவறுதல்) முறையாக ஆவணங்களை பேணத் தவறுவதற்கு நாளொன்றுக்கு ரூபா 1,000 விதிக்கின்றது.

**(ஆ) குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள்**

- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 187 ஆம் பிரிவின் பிரகாரம் (உதவுதலும் உடந்தையாகவிருத்தலும்), உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ், குற்றவியல் தவறொன்றைப் புரிவதற்கு இன்னொரு ஆளுக்கு வேண்டுமென்றே உதவுகின்ற, உடந்தையாகவிருக்கின்ற, துணைபுரிகின்ற, ஆலோசனை அளிக்கின்ற, தூண்டுகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற ஆளொருவர், தவறானது அவ்வாளினால் புரியப்பட்டிருந்தால் விதிக்கப்பட்டிருக்கக்கூடிய அதே தண்டத்திற்கு குற்றத்தீர்ப்பின் மேல் ஆளாதல் வேண்டும்.

- வரிமதிப்பீடு, கொடுப்பனவு அல்லது வரிச் சேகரிப்பை வேண்டுமென்றே தட்டிக்கழிக்கின்ற அல்லது தட்டிக்கழிப்பதற்கு முயற்சிசெய்கின்ற ஆளொருவர் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ரூபா. 10,000,000 ஐ விஞ்சாத



www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk



குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கான சிறைத் தண்டனைக்கு அல்லது அவை இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும் என 189 ஆம் பிரிவானது (வரித் தட்டிக்கழிப்பு) ஏற்பாடு செய்துள்ளது.

- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தை நிருவகிப்பதில், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வேண்டுமென்றே தடையாக இருக்கின்ற அல்லது தடையாக இருக்க முயற்சி செய்கின்ற ஆளொருவர், தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கபட்டதன் மேல் ரூபா 1,000,000 ஐ விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதி ஒன்றுக்கான சிறைத் தண்டனைக்கு அல்லது அவை இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும் என 190 ஆம் பிரிவானது (வரி நிருவாகத்துக்குத் தடையாகவிருத்தல்) ஏற்பாடு செய்துள்ளது. விபரத்திரட்டொன்றை கோப்பிடுவதற்கு தவறுதல், ஒரு முக்கியமான விபரத்தில் பொய்யான அல்லது பிழைவழிநடத்தும் கூற்றொன்றை வரி அலுவலர் ஒருவருக்குச் செய்தல், தேவைப்படுத்தப்பட்ட பதிவேடுகளை பேணத் தவறுதல் அல்லது வேறுவகையில் தீர்மானம், வரிமதிப்பீடு அல்லது வரிச் சேகரிப்புக்கு தடையாக இருத்தல் என்பவை வரி நிருவாகத்துக்கு தடையாக இருத்தல் என்பதுள் அடங்கும். வரிச் சேகரிப்புக்கு தடையாக இருந்த அந்த வரியானது, அவ் ஆளின் சொந்த வரியாக இல்லாதவிடத்தும் அவ் ஆள் வரி நிருவாகத்துக்கு தடையாக இருந்த தவறுக்கு குற்றவாளியாவார்.



www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk



- ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய தகவல்களையுடைய ஏதேனும் ஆவணம் ஒன்றை அல்லது ஆவணச் சான்றிதழை மோசடியாக தயாரிக்கும் ஆளொருவர் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவான் ஒருவருக்கு முன்னர் சுருக்க விசாரணையின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ரூபா. 1,000,000 ஐ விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது ஆறு மாதத்தை விஞ்சாத காலப்பகுதி ஒன்றுக்கான சிறைத் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும் என 190அ ஆம் பிரிவு (மோசடியாக தயாரிக்கப்பட்ட அல்லது சான்றுபடுத்தப்பட்ட ஆவணங்கள்) ஏற்பாடு செய்துள்ளது.

இந்த வழிகாட்டியின் சிங்களம் அல்லது ஆங்கில மொழிபெயர்ப்பினை உள்நாட்டு இறைவரி திணைக்கள www.ird.gov.lk என்ற வலைதள நுழைவாயிலில் இருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் செலுத்தப்படற்பாலதான வருமான வரி கணிப்பீடு மற்றும் விபரத்திரட்டு படிவத்தை பூரணப்படுத்துவதற்கான விரிவான அறிவுறுத்தல்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் www.ird.gov.lk என்ற வலைதள நுழைவாயிலில் இருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். 2021/2022 ஆம் வரி மதிப்பீட்டாண்டுக்கான விபரத்திரட்டின் சமர்ப்பித்தல் தொடர்பான காணொளி காட்சிக்கு யூ-டியூப் சனலான (Youtube Channel) “INLAND REVENUE DEPARTMENT-SRI LANKA” இனை பார்க்கவும்.



www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk

www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk



மேலதிக விபரங்களுக்கு பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்;

1. 1944 – உள்நாட்டு இறைவரி அழைப்பு நிலையம்
2. 011-2134250 – சிரேஷ்ட ஆணையாளர் – வியாபார ஆலோசனைப் பிரிவு
3. 011-2134251 – ஆணையாளர் - வாடிக்கையாளர் சேவை மற்றும் ஊக்குவிப்பு அலகு
4. 011-2134204 – ஆணையாளர்- வியாபார ஆலோசனைப் பிரிவு
5. அனைத்து பிராந்திய மற்றும் நகர அலகு ஆணையாளர்கள்

බදු - වඩා හොඳ අනාගතයකට
வரிகள் – வளமான எதிர்காலத்திற்காக
**TAXES - FOR A BETTER FUTURE**



www.ird.gov.lk www.ird.gov.lk www.ird.gov.lk